# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br>Miscellaneous : <br>Preliminary Register : CC 17/2019<br>Sessions : <br>Deposition of Witness for : LW16/PW- 12<br>Name : , மருத்துவர் கமருல்ஜமான்<br>Father's/Husband's Name : <br>Nationality : Indian | Village:<br>Age :52<br>Taluk : <br>Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 20.11.2024.**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் முதன்மை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 09.05.2007 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் மதியம் 1.30 மணியளவில் சுமார் 20 வயது மதிக்கதக்க காங்கேயன்பேட்டை புது தெருவை சேர்ந்த அம்மாசி மகன் செல்லப்பன் என்பவரை தலைமை காவலர் ரவிச்சந்திரன் என்பவர்

ஆண்மை தன்மை மற்றும் மருத்துவ பரிசோதனைக்காக ஆஜர் படுத்தினார். நான் அவரை பரிசோதித்தபோது அவர் சாதாரண உடல் வாகுடன் இருந்தார். அவருக்கு ஆண்களுக்கு அந்த வயதில் ஏற்படக்கூடிய அனைத்து உடல் மாறுபாடுகள் இருந்தது. அவரது ஆணுறுப்பு வயதிக்கேற்ற வளர்ச்சியில் இருந்தது. அவரிடம் இருந்து விந்துவை எடுத்து பரிசோதனைக்கு அனுப்பினேன். பரிசோதனை முடித்து ஆவணங்களை பார்வையிட்டு மேற்படி நபர் ஆண்மைதன்மை இல்லாதவர் என்றும் குழந்தைபேறுக்கு தகுதி இல்லாதவர் என கூற முடியாது என கருத்துரை வழங்கி சான்று வழக்கினேன். ( மேற்படி மருத்துவ சான்று **அசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**